# செங்கோட்டை நகராட்சி.

# மக்கள் சாசனம்.

செங்கோட்டை நகர்மன்ற தீர்மான எண். 921. நாள் : 11—1—'99 ன்படி
ஒப்புதல் அளிக்கப்பட்டது

உங்களுக்கு பணிபுரிய எங்களுக்கு உதவுங்கள்.

## குடிநீர் விநியோகம் :

| | | |
|---|---|---|
| அ | குடிநீர் இணைப்பு : | |
| | விண்ணப்பப் படிவம் வழங்குதல் | வரவேற்பு மையத்தில் அலுவலக நேரங்களில் கேட்டவுடன் அப்போதே |
| | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை கட்டணத்துடன் பெறுதல் | வரவேற்பு மையத்தில் உடனே |
| | பெறப்பட்ட விண்ணப்பத்திற்கு ஒப்புகை சீட்டு வழங்குதல் | விண்ணப்பம் பெற்றவுடன், அப்போதே |
| | விண்ணப்ப மனுவில் குறைகளிருந்தால் காணப்படும் குறைகளை மனுதாரருக்குத் தெரிவித்தல் | ஒரு வாரம் |
| | குறைகள் களைந்ததைச் சரிபார்த்து குடிநீர் இணைப்புக் கட்டணம் செலுத்துவதற்கான செலுத்துச் சீட்டு (Challan) / அறிவிப்பு வழங்குதல் | 15 நாட்கள் |
| | குடிநீர் இணைப்பு வழங்குதல் | 30 நாட்கள் (விண்ணப்பம் பெற்ற நாளிலிருந்து) |

## சிறப்பு வேண்டுகோள் :

| | | |
|---|---|---|
| | லாரி மூலம் குடிநீர் வழங்குதல் | குடிநீர் தடைப்பட்டது என்ற புகார் பெற்ற 24 மணி நேரத்திற்குள் |
| | திருமணம் மற்றும் இதர விழாக்களுக்கு லாரி மூலம் குடிநீர் வழங்க வேண்டுதல் | விழா நடைபெறுவதற்கு 3 தினங்களிலிருந்து 5 தினங்கள் முன்னதாக |

**புகார்கள் / குறைகள் :**

| | |
|---|---|
| தீத்தடுப்பு நடவடிக்கைகளுக்காக | 24 மணி நேரமும் |
| வீட்டு குடிநீர் இணைப்பு பழுது | 7 நாட்கள் |
| பம்பிங் மெயின் பழுது / உடைப்பு | 2 நாட்களுக்குள் |
| குடிநீர் மாசு மற்றும் அசுத்தம் குறித்து | 10 நாட்கள் |
| இந்தியா மார்க் 2 அடிகுழாய் மற்றும் குழாய் கிணறு பம்புகள் பழுதுபார்த்தல் | 7 நாட்கள் |
| பொதுக் குழாய் உடைப்பு பழுது | 2 நாட்கள் |
| பழுதான நீர் அளவைமானி மாற்றுதல் | 15 நாட்கள் |

## சாலை மற்றும் நடை பாதை பராமரிப்பு :

செங்கோட்டை நகராட்சியின் தகவல் மையத்தில் பெறப்படும் புகார்கள் / விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட காலக்கெடுவிற்குள் செயலாக்கப்படும்.

| | |
|---|---|
| சாலையிலுள்ள சிறிய பள்ளங்களை நிரப்புதல் | 15 நாட்கள் |
| சாலையில் சிறுபணிகள் (patch works) | 30 நாட்கள் |
| போக்குவரத்தை தடைபடுத்தும் ஆக்கிரமிப்புகள் போன்றவற்றை அகற்றுதல் | 10 நாட்கள் |
| காணமற்போன பாதாளச் சாக்கடை மூடிகளைப் போடுதல் | 3 நாட்கள் |
| கட்டிட இடிபொருட்களை கட்டிடத்தின் சொந்தக்காரரால் பொது இடத்திலிருந்து அகற்றப்படுத்துதல் | ஒரு வாரம் |
| அவ்வாறு அகற்றப்படாவிடின் நகராட்சியால் அகற்றுதல் | ஒரு வாரம் |
| சாலையை வெட்டுவதற்கு அனுமதி கோரும் விண்ணப்பங்கள் மீது முடிவெடுத்தல் | ஒரு வாரம் |

## தெரு விளக்குகள் :

| | |
|---|---|
| பிரதான சாலையில் உள்ள தெரு விளக்கு பல்பு / குழல் விளக்குகளை மாற்றுதல் / சீரமைத்தல் | 2 நாட்கள் |
| உள் சாலைகளில் உள்ள தெரு விளக்கு பல்புகள் மாற்றுதல் / சீரமைத்தல் | 3 நாட்கள் |

## பொது சுகாதாரப் பிரிவு உரிமங்கள் :

உணவு மற்றும் உணவு அல்லாத தொழில்களுக்கான புதிய உரிமங்கள் :

| | |
|---|---|
| விண்ணப்ப படிவம் வழங்குதல் | வரவேற்பு மையத்தில் அலுவலக நேரங்களில் கேட்டவுடன் அப்போதே |
| விண்ணப்பங்கள் கட்டணத்துடன் பெறுதல் | வரவேற்பு மையத்தில் உடனுக்குடன் |
| குறைகளிருந்தால் அவைகளைத் தெரிவித்தல் | ஒரு வாரம் |
| குறைகள் களைந்ததைச் சரிபார்த்து கட்டணம் செலுத்த அறிவிப்பு செலுத்துச் சீட்டு வழங்குதல் | 30 நாட்களுக்குள் |
| உரிமம் வழங்குதல் | 45 நாட்கள் |

## உரிமங்கள் புதுப்பித்தல் ;

| | |
|---|---|
| விண்ணப்பப் படிவம் வழங்குதல் | வரவேற்பு மையத்தில் அலுவலக நேரங்களில் கேட்டவுடன் அப்போதே |
| விண்ணப்பம் பெறுதல் / கட்டணம் செலுத்துதல் | வரவேற்பு மையத்தில் உடனுக்குடன் |
| உரிமம் புதுப்பித்து வழங்குதல் | 45 நாட்களுக்குள் |

## பொது சுகாதாரம் :

பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை :

| | |
|---|---|
| சாலைகள் மற்றும் பொது இடங்களை சுத்தம் செய்வது பற்றிய புகார்கள் | 2 நாட்கள் |
| நகராட்சி குப்பைத் தொட்டிகளிலிருந்து குப்பைகளை அகற்றுதல் பற்றிய புகார்கள் | ஒரு நாள் |
| காலரா மற்றும் இதர தொற்றுநோய் குறித்த தகவல்கள் | 24 மணி நேரத்திற்குள் |

## பிறப்பு / இறப்பு சான்றிதழ் :

| | | |
|---|---|---|
| பிறப்பு/இறப்பு 1 முதல் ~~14~~ 21 நாட்களுக்குள் பதிவு செய்து சான்றிதழ் வழங்குதல் | கட்டணமின்றி | ஒரு நாள் |
| ~~15~~ 22 முதல் 30 நாட்களுக்குள் பிறப்பு/இறப்பு புதிவு செய்து சான்றிதழ் வழங்குதல் | தாமதக் கட்டணம் ரூ. 2-00 | ஒரு நாள் |
| 1 மாதத்திற்கு மேல் 1 ஆண்டுக்குள் பதிவு செய்து சான்றிதழ் வழங்குதல் | தாமதக் கட்டணம் ரூ. 5-00 | ஒரு வாரம் |
| 1 ஆண்டுக்குப் பிறகு பதிவு செய்து சான்று வழங்குதல் | மாஜிஸ்ட்ரேட் உத்திரவு மற்றும் தாமதக் கட்டணம் ரூ 10-00 | ஒரு வாரம் |

## ஏற்கனவே பதிவு செய்த இனங்களுக்கு சான்றிதழ் நகல் வழங்க :

| | |
|---|---|
| விண்ணப்பம் பெறுதல் | வரவேற்பு மையத்தில், அப்போதே |
| கட்டணம் செலுத்துதல் | வரவேற்பு மையத்தில் அப்போதே |
| பதிவு சரிபார்த்து நகல் வழங்க | 7 நாட்கள் |

## கட்டிட வரைபட அனுமதி :

| | |
|---|---|
| விசாரணை அலுவலகத்தில் விண்ணப்பங்களை வழங்குதல், கட்டணம் பெறுதல் | வரவேற்பு மையத்தில், உடனுக்குடன் |
| பெறப்பட்ட மனுக்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்குதல் | வரவேற்பு மையத்தில் உடனுக்குடன் |
| குறைகளிருந்தால் அவைகளை மனுதாரருக்கு தெரிவித்தல் | ஒரு வாரத்தில் |
| மனுக்களில் உள்ள குறைபாடுகளை களைவதற்கு அலுவலகத்தில் ஆலோசனை வழங்குதல் | ஒரு வாரத்தில் |

| | |
|---|---|
| குறைகள் களைந்ததைச் சரிபார்த்து கட்டணம் செலுத்த அறிவிப்பு வழங்குதல் | ஒரு வாரத்தில் |
| கட்டிட அனுமதி வழங்குதல் | 30 நாட்களுக்குள் |

## அனுமதி புதுப்பித்தல் :

| | |
|---|---|
| விண்ணப்பம் பெறுதல்/கட்டணம் பெறுதல் | வரவேற்பு மையத்தில் உடனுக்குடன் |
| காலாவதியான அனுமதிகளைப் புதுப்பிப்பதற்கு முடிவினை தெரிவித்தல் | 15 நாட்கள் |

## சொத்துவரி :

| | | |
|---|---|---|
| அ | வரி விதிப்பு : | |
| | வரி விதிப்பு தொடர்பான விவரங்கள் அறிதல், ஒப்புகை தருதல் | வரவேற்பு மையத்தில், உடனுக்குடன் |
| | வரிவிதிப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு விண்ணப்பம் பெறுதல் | வரவேற்பு மையத்தில், உடனுக்குடன் |
| | வரிவிதிப்பு ஆணை | 20 நாட்களுக்குள் |
| ஆ | பெயர் மாற்றம் ; | |
| | விண்ணப்பங்கள் பெறுதல், ஒப்புகை பெறுதல் | வரவேற்பு மையத்தில் உடனுக்குடன் |
| | ஆணைகள் வழங்குதல் | 15 நாட்களுக்குள் |

## பொது :

## சான்றளிக்கப்பட்ட ஆவண நகல்கள் வழங்குதல் :

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறுதல் ஒப்புகை தருதல் | வரவேற்பு மையத்தில், உடனுக்குடன் |
| கட்டணம் பெறுதல் | வரவேற்பு மையத்தில் உடனுக்குடன் |
| நகல்கள் வழங்குதல் | 7 நாட்கள் |

XXI

## உங்களுக்காக சேவை செய்ய எங்களுக்கு நீங்களும் உதவி செய்யலா

★ குடிநீர் குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை உடனடியாக நகராட்சி அலுவலகத்தி தெரிவிக்கலாம்

★ குடிநீரை குடிப்பதற்கு மட்டுமே உபயோகிக்க வேண்டும். பிற உபயோகங்களுக்கு முடி வரையில் அந்தந்த பகுதியில் கிடைக்கும் கிணற்று நீரைப் பயன்படுத்தவும்.

[illegible]

★ குப்பைகளை / கழிவுநீர்க் கால்வாய்களில் ~~போடாமல் அவற்றிற்கான குப்பைத் தொட்டி சேர்க்கவும்.~~ [illegible]

★ சுற்றுப்புறத்தை கழிவு நீர் தேங்காமல் பராமரிக்கவும்.

★ காலரா மற்றும் தொற்றுநோய் அறிகுறிகள் தெரிந்தால் உடனுக்குடன் நகராட்சி அலு கத்திற்கு தெரிவிக்கலாம்.

★ உங்களை பாதிக்கும் வகையில் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை தெரிவிக்கலாம்.

★ உங்கள் வரிகள் மற்றும் கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்துங்கள்.

★ வீட்டில் பீடி சுற்றும் தொழிலாளர்கள் பீடி இலைகளை வீட்டில் சேகரித்து வைத்து கொண்டு நகராட்சி லாரி, வண்டிகள் அவ்வழியாக வரும்பொழுது வண்டியில் கொட்டும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★ வீட்டு குடிநீர் இணைப்புகளில் மின் மோட்டார் பொருத்தி சட்ட விரோதமாக தண்ணீ உறிஞ்சுவதை தெரிவிக்கலாம்.

★ கட்டிடம் கட்டும் முன்பு கட்டிட வரைபடம் நகராட்சியில் கொடுத்து முன் அனும கட்டாயம் பெறப்படவேண்டும்.

# பொது

★ மேற்கண்ட சேவை இனங்களில் காலதாமதம் காணப்படுமாயின் அதற்கான காரணங்களையும், தேவைப்பட்டால் கூடுதல் கால அவகாசத்தையும் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

★ எந்தவொரு விண்ணப்பமும் உடனடியாக பெற்றுக்கொண்டு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும்.

★ சேவை இனங்களில் புகார் மற்றும் குறைகளைக் களைதல் தொடர்பாக முப்பது நாட்களுக்குள் பதில் அளிக்கப்படும்.

★ சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி அளிக்கப்படும் சேவை இனங்களைப் பொறுத்தமட்டில் அவற்றிற்கான விதிமுறைகள், கட்டணம் கட்டும் முறை, மேல் முறையீடு பற்றிய விவரங்கள் தகவல் மையத்தில் பொதுமக்களுக்கு உதவும் வகையில் வைக்கப்படும். மையத்தில் மனுக்கள் பரிசீலனை பொதுப்படையாக அமையும். சிறிய குறைகள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.

★ இந்த 'மக்கள் சாசனம்' மற்றும் நகராட்சியின் இதர சேவைகள் குறித்த ஆலோசனைகளும், குறிப்புகளும் வரவேற்கப்படுகின்றன. அவற்றை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

1) நகர்மன்றத் தலைவர்,
செங்கோட்டை நகர்மன்றம்.
செங்கோட்டை

2) ஆணையாளர்,
செங்கோட்டை நகராட்சி,
செங்கோட்டை

இங்ஙனம்

ஆணையாளர்
செங்கோட்டை நகராட்சி.
செங்கோட்டை

நகர்மன்றத் தலைவர்
செங்கோட்டை நகராட்சி.
செங்கோட்டை